22.09.2025 **OS.No. 118 / 2014**

**பி.வா.சா. 2 பெயர்: ஷேக் இஸ்மாயில் த/பெ. ஷேக் உஷைன்**

**சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை: ( 11,12,18 முதல் 20 வரை பிரதிவாதிகள் தரப்பில் )**

எனது தகப்பனார் பெயர் ஷேக் உஷைன் என்றால் சரிதான். அவருக்கு 100 ஏக்கருக்கு மேல் சொத்து இருந்தது என்றால் சரிதான். அவருக்கு 4 மகன்கள் என்றால் சரிதான். நான் மூத்தவர் என்றால் சரிதான். எனக்கும் என்னுடன் பிறந்தவர்கள் மற்றும் எனது தகப்பனார் ஆகியோருக்கு இடையில் 02.11.1970 தேதியில் வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துகள் பொருத்து பாக பிரிவினை ஏற்பட்டது என்றால்சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் ஏ பட்டியல் சொத்து எனது தகப்பனாருக்கும் பி பட்டியல் சொத்து எனக்கும் சி, டி , இ ஆகிய சொத்துக்கள் எனது மூன்று தம்பிகளுக்கும் பாகமாக கிடைத்தது என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் படி எங்களுக்கு பாகமாக கிடைத்த சொத்துக்களை அனுபவம் செய்யவும் ஆவணம் ஏற்படுத்தவும் உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனாரின் ஏ பட்டியல் சொத்து சுமார் 23 ஏக்கர் என்றால் சரியல்ல. 11 ஏக்கர் 5 சென்ட்தான் ஒதுக்கப்பட்டது. வழக்கு சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் ஒரு பகுதி என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை தவிர வேறு சொத்துகளும் எனது தகப்பனாருக்கும் பாகமாக விடப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்த பின்பு அவரது சொத்துகளை நாங்கள் தனிதனியாக அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது என்றால் சரியல்ல. அதேபோல் அதில் உள்ள மற்ற கையொப்பம் எனது தகப்பனார் மற்றும் எனது சகோதர்களது என்றால் எனக்கு தெரியாது. எனது தகப்பனார் இறந்த பின்பு வழக்கு சொத்துகள் எனது தம்பி அகமது பாஷா அவர்களுக்கு வாய்மொழியாக ஒதுக்கி அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளில் சட்டபடியாக எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகளை 10ம் பிரதிவாதி வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களின் படி உரிய மறுபயன் கொடுத்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் கிரையம் வாங்கிய தகவல் எனக்கு தெரியாது. மேற்படி 10ம் பிரதிவாதி வழக்கு சொத்துகளில் கிரையம் பெற்ற பின்பு பெருமளவில் செலவு செய்து வழக்கு சொத்துகளை சமன்செய்து மாமரம், தென்னைமரங்கள் நட்டு சூரிய மின்வேலி அமைத்து அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு

சொத்துகளுக்கு பக்கத்தில் 10 ம்பிரதிவாதிக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். 10ம் பிரதிவாதி இறந்த பின்பு வழக்கு சொத்துகளை அவரது வாரிசுகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்துக்கள் 10ம் பிரதிவாதி மற்றும் அவரது வாரிசுகளுக்குதான் சொந்தம் என்றால் அதில் எனக்கும் மற்ற வாதிகளுக்கும் எவ்வித சம்மதமும் கிடையாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.